ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் கலைக் கல்லூரி
திருப்பனந்தாள் – 612504
S.K.S.S ARTS COLLEGE, THIRUPPANANDAL - 612504





# வினாவங்கி

தாளின் தலைப்பு

# ஊடகவியல்

ALLIED COURSE - I I B.LIT

பாடக்குறியீடு : 16LACLT1

பருவம் I

தயாரித்தவர்



முனைவர் ம.புவனேஸ்வரி, எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை

# ALLIED COURSE - I

## ஊடகவியல்

**நோக்கம்**

1. ஊடகங்களின் பரிணாம வளர்ச்சியை, ஊடகங்களின் தேவையை உணர்த்துதல்.
2. ஊடகங்களைப் பயன்படுத்த, பயன்கொள்ள பயிற்றுவித்தல்.
3. ஊடகத்துறைகளில் பணிவாய்ப்பு பெற மாணவர்களைத் தயார்ப்படுத்துதல்.

**பயன்கள்**

1. தகவல் ஊடகங்கள் பற்றி அறிவர்.
2. ஊடகங்களை கல்விசார்ந்து பயன்படுத்துவதில் பயிற்சி பெறுவர்.
3. ஊடகங்களில் பணிவாய்ப்பு பெறுவர்.

**அலகு - 1** 15 மணி

தகவல் தொடர்பு விளக்கம் - தகவல் தொடர்பில் ஊடகங்களின் பங்கு - ஊடக வகைகள் - மரபுவழி - அச்சுவழி - மின்வழி - மின்னணுவழி ஊடகங்கள் - ஊடகங்களின் இன்றியமையாமை.

**அலகு - 2** 20 மணி

அச்சுவழி ஊடகங்களின் தோற்றம், வளர்ச்சி - தனிச்சிறப்புகள் - இதழ்களின் வகைகள் - இதழ்களின் பணிகள் - இதழ்களின் அமைப்பு முறை - தலையங்கம் - செய்தி - கட்டுரை - இலக்கியம் - கருத்துப்படம் - விளம்பரம் ஆகியவற்றை உருவாக்கும் முறைகள் - இதழ்களின் மொழி நடை - இதழாளருக்குரிய தகுதிகள்.

**அலகு - 3** 15 மணி

வானொலி தோற்றம் வளர்ச்சி - பல்வேறு நிகழ்ச்சிகள் - செய்தி, கல்வி, வேளாண்மை, இசை, இலக்கிய ஒலிபரப்புகள் - வானொலியில் தனிநபர் உரை, கலந்துரையாடல்,நேர்காணல்,நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குதல் ஆகியவற்றிற்குத் தேவைப்படும் திறன்கள் - தொலைக்காட்சி தோற்றம் வளர்ச்சி - அறிவு சார், பல்சுவை சார் நிகழ்ச்சிகள் - செய்தி வாசித்தல், நேர்காணல், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, நிகழ்ச்சி வருணனை ஆகியவற்றிற்குத் தேவையான தகுதிகள் - தொலைக்காட்சியின் செல்வாக்கு.

**அலகு - 4** 20 மணி

கணினி விளக்கம் - பல்துறைப் பயன்பாடுகள் - கற்றலில் கணினியின் பயன்பாடுகள் - இணையம் விளக்கம் - இணையத்தின் வழித் தகவல்களைத் திரட்டுதல் - இணையதளங்கள் - இணைய நூலகங்கள் - இணைய இதழ்கள் - வலைப்பூக்கள் - மின்னஞ்சல் ஆகியவற்றின் தனிச்சிறப்புகளும் பயன்பாடுகளும்.

**அலகு - 5** 20 மணி

ஊடகத் துறையில் மொழியின் பயன்பாடு - இதழ்களில் பிழையின்றி எழுதுவதற்குப் பயிற்சியளித்தல் - அச்சுப்படி சரிபார்த்தல் - தலையங்கம், செய்தி ஆகியன எழுதப் பயிற்சி அளித்தல் - பொருத்தமான செய்தித் தலைப்பிடுவதற்குப் பயிற்சியளித்தல் - வானொலியில் கருத்துக்களை நிரல்பட எடுத்துரைக்கவும், தெளிவாக உச்சரிக்கவும் பயிற்சி அளித்தல் - வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றில் செய்தி வாசித்தல், நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குதல், நேர்முக வர்ணனை, நேர்காணல், கலந்துரையாடல், இலக்கிய நிகழ்வுகளில் பங்கேற்றல் ஆகியவற்றுக்கான பயிற்சி அளித்தல்.

குறிப்பு: ஐந்து அலகுகளிலும் சமஅளவில் வினாக்கள் அமைதல் வேண்டும்.

**பார்வை நூல்கள்**


1. முனைவர் கி.இராசா - மக்கள் தகவல் தொடர்பியல், பாவை பப்ளிகேஷன்ஸ், 142, ஜான்கான்சாலை, இராயப்பேட்டை, சென்னை.14
2. முனைவர் வி.பார்வதி - தமிழில் தகவல் தொடர்பு ஊடகங்கள், 29, 8-வது தெரு, என்.ஜி.ஓ. குடியிருப்பு, தென்காசி
3. மா.பா.குருசாமி - இதழியல் கலை, குரு-தேமொழி, தாயன்பகம், ஆறாவது தெரு, ஏ.கே.எம்.ஜி.நகர், திண்டுக்கல் - 624001. (தொலைபேசி : 0451-2424853)
4. முனைவர் மு.இளங்கோவன் - இணையம் கற்போம், வயல்வெளிப் பதிப்பகம், இடைக்கட்டு, உள்கோட்டை (அஞ்சல்), கங்கைகொண்ட சோழபுரம் (வழி), அரியலூர் மாவட்டம் - 612 901 (அலைபேசி : 9442029053)
5. முனைவர் துரை.மணிகண்டன் - தமிழ்க் கணினி இணையப் பயன்பாடுகள், கமலினி பதிப்பகம், கச்சமங்கலம் அஞ்சல், தோகூர் வழி, தஞ்சாவூர் மாவட்டம் - 613 102. (அலைபேசி : 9486265886)


**இணைய முகவரிகள்**


1. www.tamiljournalismhistory.blogspot.com
2. www.achukkuudamthamilagam.net
3. www.tamilmirror.dk

# அலகு - 1

## பகுதி - அ

- **சரியான விடையைத் தேர்ந்தெடு**

1. மொழி தோன்றுவதற்கு முன்பே தகவல் தொடர்பு .................... மூலம் இருந்தது.
   - அ) எழுத்து
   - ஆ) சுவடி
   - இ) சைகை
   - ஈ) கல்வெட்டு
2. சங்ககாலத்தில் மக்களுக்குச் செய்திகளை, அரசாணைகளை அறிவிக்கப் பயன்பட்டது.
   - அ) முரசு
   - ஆ) புறா
   - இ) தூதுவர்
   - ஈ) ஓலைச்சுவடி
3. பின்வருவனவற்றுள் தகவல் தொடர்புக்கு உதவுவது
   - அ) சீழ்க்கை
   - ஆ) மணியடித்தல்
   - இ) ஒலியெழுப்பல்
   - ஈ) அனைத்தும்
4. கடிதவழித் தகவல் தொடர்பிற்குப் பயன்படுத்தப்பட்ட பறவை
   - அ) மயில்
   - ஆ) புறா
   - இ) சிட்டுக்குருவி
   - ஈ) காக்கை
5. தகவல் தொடர்பைக் குறிக்கும் ஆங்கிலச்சொல்
   - அ) CONNECTION
   - ஆ) FRIENDSHIP
   - இ) RELATIONSHIP
   - ஈ) COMMUNICATION

6. கம்யூனிகேஷன் என்னும் ஆங்கிலச் சொல் எந்தமொழிச் சொல்லிலிருந்து உருவானது

அ) இலத்தீன்

ஆ) கிரேக்கம்

இ) ஜெர்மனி

ஈ) இத்தாலி

7. தகவல் தொடர்பு என்பது ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு ............... அனுப்புவது

அ) பொருட்களை

ஆ) அரசாணைகளை

இ) அறிவிப்புகளை

ஈ) தகவலை

8. ஊடகங்களை ............... வகைகளாகப் பகுக்கலாம்.

அ) 3

ஆ) 5

இ) 4

ஈ) 2

9. அச்சுவழி ஊடகங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) இதழ்கள்

ஆ) கடிதம்

இ) கல்வெட்டு

ஈ) வானொலி

10. வானொலி என்பது ........... ஊடகம்.

அ) மரபுவழி

ஆ) மின்வழி

இ) அச்சு வழி

ஈ) மின்னனு வழி

விடைகள் 1.இ, 2.அ, 3.ஈ, 4.ஆ, 5.ஈ, 6.அ, 7.ஈ, 8.இ, 9.அ, 10.ஆ

## பகுதி - ஆ

### ❖ ஓரிரு சொற்களில் விடையளி

11. தொடர்பியல் என்றால் என்ன?
12. தகவல் என்பதன் பொருள் யாது?
13. கம்யூனிகேஷன் என்னும் சொல் எந்தச் சொல்லிலிருந்து தோன்றியது? அதன் பொருள் யாது?
14. தகவல் தொடர்பு - வரையறை செய்க.
15. மொழி தோன்றும் முன்னர் தகவல் தொடர்புக்கு எவை பயன்பட்டன?
16. மரபுவழிச் சாதனங்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
17. ஊடகங்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
18. அச்சுவழி ஊடகங்கள் என்பவை யாவை?
19. மின்வழி ஊடகங்களுக்குச் சான்றுகள் தருக.
20. மின்னணு வழி ஊடகங்கள் யாவை?

## பகுதி - இ

### ❖ விரிவாக விடையளி

21. தகவல் தொடர்பியல் பற்றி வரையறை செய்க.
22. ஊடகங்களின் வகைகளைத் தொகுத்துரைக்க.
23. பழங்காலத்தில் தகவல் தொடர்பு அமைந்திருந்த விதத்தினைக் குறிப்பிடுக.
24. கம்யூனிகேஷன் (COMMUNICATION) என்ற ஆங்கிலச் சொல்லின் பொருள் பற்றி விளக்குக.
25. தகவல் தொடர்பில் ஊடகங்களின் பங்கு குறித்து எடுத்துரைக்க.
26. ஊடகங்கள் பற்றி அறிமுகம் செய்க.
27. மரபு வழிச் சாதனங்கள் என்று குறிப்பிடப்படுபவை யாவை?
28. அச்சுவழிச் சாதனங்களின் தேவை பற்றிக் குறிப்பிடுக.

29. மின்வழி ஊடகங்கள் பற்றி எடுத்துரைக்க.

30. மின்னணு வழி ஊடகங்களின் பயன்பாட்டினை விளக்குக.

## பகுதி - ஈ

### ❖ கட்டுரை வடிவில் விடையளி

31. தொடர்பியல் பற்றி விவரிக்க.

32. தகவல் தொடர்பியல் பற்றிய அறிஞர்களின் கருத்துகளைக் குறிப்பிட்டு விளக்குக.

33. 'தகவல் தொடர்பும் ஊடகங்களும்' என்னும் தலைப்பில் கட்டுரைக்க.

34. ஊடகங்கள் என்றால் என்ன? அவற்றை எவ்வாறெல்லாம் வகைப்படுத்தலாம்? சான்றுகள் தருக.

35. மரபுவழி ஊடகங்களைச் சான்றுகளுடன் விவரிக்க.

36. அச்சு வழிச் சாதனங்கள் பற்றி ஆய்க.

37. மின்வழி ஊடகங்கள் சிலவற்றைக் குறிப்பிட்டு விளக்குக.

38. மின்னணு வழி ஊடகங்கள் பற்றி மதிப்பிடுக.

39. ஊடகங்களின் இன்றியமையாமையைப் புலப்படுத்துக.

40. ஊடகங்களால் விளையும் நன்மைகள் பற்றி எடுத்துரைக்க.

# அலகு - 2

## பகுதி - அ

### ❖ சரியான விடையைத் தேர்ந்தெடு

1. தமிழ்நாட்டில் முதல் அச்சுக்கூடம் நிறுவப்பட்ட ஆண்டு

அ) 1712

ஆ) 1715

இ) 1770

ஈ) 1812

2. இந்தியாவில் வெளிவந்த முதல் இதழ்

அ) பெங்கால் கெஜட்

ஆ) இந்தியன் மேகசின்

இ) அமெரிக்கன் கெஜட்

ஈ) நியூஸ் இந்தியா

3. காந்தியடிகள் நடத்திய இதழ்

அ) வந்தே மாதரம்

ஆ) சத்தியமேவ ஜெயதே

இ) தேசபக்தன்

ஈ) நவஜீவன்

4. சுதேசமித்திரன் இதழைத் தொடங்கியவர்

அ) பாரதியார்

ஆ) திரு.வி.க

இ) ஜி.சுப்பிரமணிய ஐயர்

ஈ) கல்கி

5. இதழ்களின் பணிகள்

அ) 5

ஆ) 6

இ) 2

ஈ) 4

6. இலக்கிய இதழுக்கு எடுத்துக்காட்டு

அ) ஆனந்த விகடன்

ஆ) செந்தமிழ்ச்செல்வி

இ) ராணிமுத்து

ஈ) ஜனசக்தி

7. மஞ்சள் இதழ்கள் (YELLOW JOURNALS) என்பவை

அ) நச்சு இதழ்கள்

ஆ) கேளிக்கை இதழ்கள்

இ) பொழுதுபோக்கு இதழ்கள்

ஈ) சிறுவர் இதழ்கள்

8. ' பத்திரிகை எழுத்தாளர் கையேடு' என்னும் நூலின் ஆசிரியர்

அ) திரு.வி.க

ஆ) பெர்சிவல் பாதிரியார்

இ) சி.பா.ஆதித்தனார்

ஈ) பாரதியார்

9. நாளிதழ்களின் வகைகள்

அ) 3

ஆ) 2

இ) 4

ஈ) 7

10. நான்காவது தூண் என்று சுட்டப்படுவது

அ) நாடாளுமன்றம்

ஆ) நீதித்துறை

இ) நிர்வாகத்துறை

ஈ) பத்திரிக்கைத்துறை

விடைகள் 1.அ, 2.அ, 3.ஈ, 4.இ, 5.ஈ, 6.ஆ, 7.அ, 8.இ, 9.ஆ, 10.ஈ

## பகுதி - ஆ

❖ ஓரிரு சொற்களில் விடையளி

11. பெங்கால் கெஜட் இதழின் ஆசிரியர் யார்?
12. தமிழ்நாட்டின் முதல் அச்சுக்கூடம் எங்கு நிறுவப்பட்டது?
13. திரு.வி.க நடத்திய இதழினைச் சுட்டுக.
14. இதழ்களின் பணிகள் யாவை?
15. புலனாய்வு இதழ்கள் என்றால் என்ன? இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
16. செய்தி - பொருள் தருக.
17. இதழியலாளரின் தகுதிகள் இரண்டினைக் குறிப்பிடுக.
18. சி.பா.ஆதித்தனார் இயற்றிய மொழிநடை நூல் யாது?

19. கேலிச்சித்திரம் என்றால் என்ன?

20. காலாண்டு இதழ்கள் என்பவை யாவை?

## பகுதி - இ

### ❖ விரிவாக விடையளி

21. இதழ்களின் தனிச்சிறப்புகளை எடுத்துரைக்க.
22. விடுதலை இயக்க இதழ்கள் பற்றிக் குறிப்பிடுக.
23. தமிழகத்தில் இதழ்களின் தோற்றம் வளர்ச்சியை விளக்குக.
24. இதழ்களின் பணிகளை விவரிக்க.
25. கருத்துப்படம் பற்றி எடுத்துரைக்க.
26. இதழ்களில் கட்டுரை எவ்வாறு அமைய வேண்டும்?
27. இதழ்களின் வகைகளை விளக்குக.
28. ' செய்தி' என்பதனை வரையறை செய்க.
29. பாரதியார், திரு.வி.க ஆகியோரின் இதழியல் பணிகளை எடுத்துரைக்க.
30. இந்தியாவில் தொடக்ககால இதழ்கள் பற்றி விவரி.

## பகுதி - ஈ

### ❖ கட்டுரை வடிவில் விடையளி

31. அச்சுவழிச் சாதனங்களின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிக் கட்டுரை வரைக.
32. இதழ்களின் அமைப்பு முறையை விவரிக்க.
33. இதழ்களில் தலையங்கத்தின் பங்களிப்பினை ஆய்க.
34. விளம்பரம் என்றால் என்ன? விளம்பரங்களினால் இதழ்கள் அடையும் நன்மைகளை மதிப்பிடுக.
35. விளம்பரத்தின் வகைகளைக் குறிப்பிட்டு விளக்குக.
36. இதழ்களில் மொழிநடை என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

37. இதழ்களில் தலையங்கம், செய்தி, கட்டுரை, இலக்கியம், கருத்துப்படம், விளம்பரம் ஆகியவற்றை உருவாக்கும் முறைகள் குறித்து ஆய்க.

38. தமிழகத்தில் குறிப்பிடத்தக்க இதழ்கள் மற்றும் இதழாசிரியர்கள் பற்றி எடுத்துரைக்க.

39. இதழியலாளர்களின் தகுதிகளைப் புலப்படுத்துக.

40. இதழ்களின் தனிச்சிறப்புகள் மற்றும் இன்றியமையாமை பற்றி விவரி.

## அலகு - 3

## பகுதி - அ

### ❖ சரியான விடையைத் தேர்ந்தெடு

1. வானொலி என்பது ....... வழித் தொடர்பு கொள்ளும் ஒரு கம்பியில்லா தொலைத் தொடர்பு ஊடகமாகும்.

அ) மின்காந்த அலைகள்

ஆ) நெட்டலைகள்

இ) குறுக்கலைகள்

ஈ) ஒலியலைகள்

2. இந்தியாவின் முதல் வானொலி நிலையம் தொடங்கப்பட்ட ஆண்டு

அ) 1890

ஆ) 1927

இ) 1945

ஈ) 1948

3. வானொலியின் தந்தை என்று போற்றப்படுபவர்

அ) ஜேம்ஸ் கிளார்க் மாக்ஸ்வெல்

ஆ) மைக்கேல் ஃபாரடே

இ) ஆலிவர் லாட்ஜ்

ஈ) மார்க்கோனி

4. விவித்பாரதி சேவை தொடங்கப்பட்ட ஆண்டு

அ) 1950

ஆ) 1967

இ) 1957

ஈ) 1958

5. இந்தியாவிலுள்ள பெரும்பாலான வானொலி நிலையங்கள் மத்திய அரசின் ................ மூலம் செயல்படுகின்றன.

அ) தூர்தர்ஷன்

ஆ) சேவா சமிதி

இ) பாரதீய சேவா

ஈ) பிரச்சார் பாரதி

6. உலக வானொலி நாள்

அ) பிப்ரவரி - 13

ஆ) டிசம்பர் - 28

இ) மார்ச் - 5

ஈ) மே - 10

7. மக்கள் கருத்தை உருவாக்குவதில் முன்னிலை வகிக்கும் ஊடகம்

அ) வானொலி

ஆ) தொலைக்காட்சி

இ) இதழ்கள்

ஈ) இணையம்

8. ஒலி, ஒளியை ஒன்றாக இணைத்து ஒளிபரப்பப்படுவது

அ) தொலைக்காட்சி

ஆ) வானொலி

இ) இணையம்

ஈ) தொலைபேசி

9. தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் வேளாண்மை சார்ந்த நிகழ்ச்சி

அ) வேளாண் அரங்கம்

ஆ) வயல்வெளி

இ) நமது வேளாண்மை

ஈ) வயலும் வாழ்வும்

10. ஆகாசவாணி என்னும் சொல் எந்த ஊடகத்தை நினைவூட்டுகிறது

அ) தொலைக்காட்சி

ஆ) வானொலி

இ) நாளிதழ்

ஈ) காலாண்டு இதழ்

விடைகள் 1.அ 2.ஆ 3.ஈ 4.இ 5.ஈ 6.அ 7.ஆ 8.அ 9.ஈ 10.ஆ

## பகுதி - ஆ

### ❖ ஓரிரு சொற்களில் விடையளி

11. வானொலி என்றால் என்ன?

12. அகில இந்திய வானொலி நிலையம் எப்பொழுது தொடங்கப்பட்டது?

13. கல்வியறிவில்லாத, எளிய, பாமர மக்களுக்குப் பெரிதும் பயன்பட்ட ஊடகம் யாது?

14. வானொலியின் சிறப்பம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

15. வானொலியில் ஒலிபரப்பப்படும் வேளாண்மை சார்ந்த நிகழ்ச்சி ஒன்றினைச் சுட்டுக.

16. அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட தொலைக்காட்சி சேவை யாது?

17. தொலைக்காட்சியில் இடம்பெறும் கல்விசார் ஒளிபரப்பிற்குச் சான்று தருக.

18. மக்கள் பொழுதுபோக்குச் சாதனமாகப் பெரிதும் பயன்படுத்தும் ஊடகம் யாது?

19. நேர்காணல் என்றால் என்ன?

20. நேரலை என்பதன் பொருள் தருக.

## பகுதி - இ

❖ **விரிவாக விடையளி**

21. தொடக்க கால வானொலி ஒலிபரப்புகள் பற்றிக் குறிப்பிடுக.

22. வானொலி தோன்றிய வரலாற்றை எடுத்துரைக்க.

23. வானொலியில் கல்வி ஒலிபரப்பு எவ்வாறு அமைகிறது?

24. வானொலியில் தனிநபர் உரை பற்றி விளக்குக.

25. வானொலி நேர்காணல் பற்றி எடுத்துரைக்க.

26. தொலைக்காட்சியின் தோற்றம் பற்றிக் குறிப்பிடுக.

27. தொலைக்காட்சியில் இடம்பெறும் அறிவுசார் நிகழ்ச்சிகளை விளக்குக.

28. தொலைக்காட்சியில் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரின் பணிகள் யாவை?

29. தொடக்ககால தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் எவ்வாறு அமைந்தன?

30. தொலைக்காட்சியின் சிறப்பம்சங்கள் பற்றி எடுத்துரைக்க.

## பகுதி - ஈ

❖ **கட்டுரை வடிவில் விடையளி**

31. வானொலியின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிக் கட்டுரை வரைக.

32. வானொலியில் இடம்பெறும் செய்தி மற்றும் கல்வி ஒலிபரப்புகள் பற்றி மதிப்பிடுக.

33. வேளாண்மை, இசை, இலக்கிய ஒலிபரப்புகள் வானொலியில் அமையும் பாங்கினை விவரி.

34. வானொலியில் தனிநபர் உரை மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்குத் தேவைப்படும் திறன்களை ஆய்க.

35. வானொலியில் நேர்காணல் செய்வோர், நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குவோருக்கான பணிகள் பற்றி விவரி.

36. தொடர்பு ஊடகங்களில் வானொலியின் பங்களிப்பினைக் கட்டுரைக்க.

37. தொலைக்காட்சியின் தோற்றம், வளர்ச்சி பற்றிக் கட்டுரை வரைக.

38. தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் பல்சுவை சார் நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

39. தொலைக்காட்சியில் செய்தி வாசித்தல் மற்றும் நிகழ்ச்சி வருணனை பற்றி எடுத்துரைக்க.

40. ஊடகங்களுள் தொலைக்காட்சியின் செல்வாக்கு பற்றிக் கட்டுரைக்க.

## அலகு - 4

## பகுதி - அ

❖ **சரியான விடையைத் தேர்ந்தெடு**

1. இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பாகச் சொல்லப்படுவது

அ) கணிப்பான்

ஆ) பேஜர்

இ) கணினி

ஈ) தொலைபேசி

2. கணினியின் மூளையாகச் செயல்படுவது

அ) மையச் செயலகம்

ஆ) திரை

இ) சுட்டி

ஈ) குறுந்தகடு

3. பின்வருவனவற்றுள் மென்பொருள் எது?

அ) விசைப்பலகை

ஆ) சுட்டி

இ) அச்சுப்பொறி

ஈ) இயக்க முறைமை (OS)

4. உலகளாவிய வலைப்பின்னல் (WWW) என்பது

அ) WORLD WIDE WEB

ஆ) WORLD WEALTH WEB

இ) WORLD WRITING WEB

ஈ) WORLD WORKING WEB

5. இணையத்தில் தகவலைத் தேடுவதற்கு உதவுவது

அ) மின்னஞ்சல்

ஆ) விசைப்பலகை

இ) இணைய உலாவி

ஈ) சுட்டி

6. பயனர் விரும்பும் ஆவணங்களைத் தேடித்தரும் வேலையைச் செய்வது

அ) இணைய முகவரி

ஆ) கடவுச்சொல்

இ) சேவை மையம்

ஈ) தேடுபொறி

7. இணையதளத்தில் ................ வடிவில் பல தகவல்கள் சேமிக்கப்பட்டிருக்கும்.

அ) மின்னணு

ஆ) எண்கள்

இ) குறியீடுகள்

ஈ) எழுத்து

8. தமிழ் இணையப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடம்

அ) மதுரை

ஆ) டில்லி

இ) சென்னை

ஈ) கோவை

9. வலைப்பூ என்பது ஆங்கிலத்தில்

அ) WEB FLOWER

ஆ) BLOG

இ) WEBSITE

ஈ) BROWSER

10. E-Mail என்பதன் முழு வடிவம்

அ) Executive Mail

ஆ) Effective Mail

இ) Electric Mail

ஈ) Electronic Mail

விடைகள் 1.இ 2.அ 3.ஈ 4.அ 5.இ 6.ஈ 7.அ 8.இ 9.ஆ 10.ஈ

## பகுதி - ஆ

### ❖ ஓரிரு சொற்களில் விடையளி

11. கணிப்பொறியின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
12. கணினி இயக்கத்திற்கு உதவும் இருவகைப் பொருள்கள் யாவை?
13. கணினி என்பதை வரையறுக்க.
14. இணையம் என்பது யாது?
15. இணைய இதழ்கள் இரண்டினைச் சுட்டுக.
16. வலைப்பூ என்றால் என்ன?
17. தொடக்க காலத்தில் இணைய இணைப்பிற்கு இன்றியமையாதவை யாவை?
18. இணைய உலவிகள் (INTERNET BROWSER) இரண்டினைக் குறிப்பிடுக.
19. மின்னஞ்சலின் சிறப்பம்சம் யாது?
20. கடவுச்சொல் என்றால் என்ன?

## பகுதி - இ

### ❖ விரிவாக விடையளி

21. முதல் தலைமுறைக் கணிப்பொறிகள் பற்றிக் குறிப்பிடுக.
22. கணினியின் தோற்றம் பற்றி விளக்குக.
23. இணைய இணைப்பிற்குத் தேவையானவற்றை எடுத்துரைக்க.

24. இணைய உலவிகள் சிலவற்றைக் குறிப்பிட்டு விளக்குக.

25. இணைய நூலகம் பற்றித் தெளிவுபடுத்துக.

26. கணினியின் இயக்கத்திற்குத் தேவையானவற்றைப் புலப்படுத்துக.

27. இணையதளங்கள் பற்றி அறிமுகம் செய்க.

28. இணையத்தில் தகவல்களைத் திரட்டும் வழிமுறைகளைக் குறிப்பிடுக.

29. மின்னஞ்சலை அனுப்புவதற்கும் பெறுவதற்கும் தேவையானவற்றை எடுத்துரைக்க.

30. கடவுச்சொல்லின் பயன்பாடு, கையாளும் முறை ஆகியவற்றை விளக்குக.

## பகுதி - ஈ

## ❖ கட்டுரை வடிவில் விடையளி

31. கணிப்பொறியின் தோற்றம் வளர்ச்சி குறித்து விரிவாக விளக்குக.

32. கணினியின் பல்துறைப் பயன்பாடுகள் குறித்து ஆய்வு செய்க.

33. கற்றலில் கணினியின் பயன்பாடுகள் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

34. தற்காலத்தில் கணினியின் இன்றியமையாமை பற்றிப் புலப்படுத்துக.

35. இணையத்தின் பயன்பாடுகளை விவரிக்க.

36. இணைய நூலகங்கள் சிலவற்றைக் குறிப்பிட்டு விளக்குக.

37. இணைய இதழ்கள் என்பவை யாவை? சான்றுகளுடன் விவரி.

38. வலைப்பூக்களை உருவாக்கும் முறை மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்துக் கட்டுரை வரைக.

39. மின்னஞ்சல் என்றால் என்ன? அதன் பயன்பாடுகளை விவரி.

40. ஊடகங்களில் கணினியின் பங்களிப்பு குறித்து ஆய்க.

# அலகு - 5

## பகுதி - அ

❖ **சரியான விடையைத் தேர்ந்தெடு**

1. இதழ்களில் .............. எழுத வேண்டும்.
   அ) சுருக்கமாக
   ஆ) தெளிவாக
   இ) குழப்பமின்றி
   ஈ) பிழையின்றி
2. இதழ்களின் மொழிநடை பற்றிய நூல்
   அ) பத்திரிகை எழுத்தாளர் கையேடு
   ஆ) இதழியல் கலை
   இ) மொழிநடைக் களஞ்சியம்
   ஈ) மொழிநடை வழிகாட்டி
3. இதழ்களின் தரத்தைத் தீர்மானிப்பது
   அ) செய்தி
   ஆ) விளம்பரம்
   இ) தலையங்கம்
   ஈ) கட்டுரை
4. செய்திக்கு ............ தலைப்பிட வேண்டும்.
   அ) நீளமாக
   ஆ) அளவாக
   இ) பொருத்தமாக
   ஈ) தெளிவாக
5. செய்தியைப் படிக்கத் தூண்டுவது
   அ) படம்
   ஆ) தலைப்பு
   இ) கேலிச்சித்திரம்
   ஈ) விளம்பரம்
6. வானொலியில் கருத்துகளை ................ எடுத்துரைக்க வேண்டும்.
   அ) நிரல்பட

ஆ) ஒவ்வொன்றாக

இ) நிதானமாக

ஈ) பிழையின்றி

7. வானொலியில் உரையாற்றும்போது உச்சரிப்பு .............. இருக்க வேண்டும்.

அ) சத்தமாக

ஆ) அழகாக

இ) தெளிவாக

ஈ) நயமாக

8. நேர்முக வர்ணனை இடம்பெறுவது

அ) திருமணம்

ஆ) சொற்பொழிவு

இ) குடமுழுக்கு

ஈ) பண்டிகைகள்

9. நேரடி ஒளிபரப்பு செய்வது

அ) வானொலி

ஆ) தொலைக்காட்சி

இ) கணினி

ஈ) அலைபேசி

10. நேர்காணல் என்பது

அ) உரையாற்றுதல்

ஆ) நேரடியாகக் காணல்

இ) பேட்டி

ஈ) கலந்துரையாடல்

விடைகள் 1.ஈ 2.அ 3.இ 4.இ 5.ஆ 6.அ 7.இ 8.இ 9.ஆ 10.இ

## பகுதி - ஆ

### ❖ ஓரிரு சொற்களில் விடையளி

11. இதழ்களில் எழுதும்போது கவனிக்க வேண்டியவை யாவை?
12. அச்சுப்படி சரிபார்த்தல் என்றால் என்ன?
13. இதழ்களில் தலையங்கத்தை எழுதுபவர் யார்?
14. தலையங்கப் பொருள் எவ்வாறு அமைய வேண்டும்?
15. செய்தியைப் படிக்க வாசகர்களைத் தூண்டுவது எது?
16. வானொலியில் உரையாற்றத் தேவையான அடிப்படைத் தகுதிகள் இரண்டினைச் சுட்டுக.
17. செய்தி வாசித்தலின் முக்கியத்துவம் யாது?
18. நேர்முக வருணனை என்றால் என்ன?
19. நேர்காணலில் இடம்பெறுவோர் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.
20. தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் இலக்கிய நிகழ்வுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

## பகுதி - இ

### ❖ விரிவாக விடையளி

21. இதழ்களில் எழுதும் முறை பற்றி எடுத்துரைக்க.
22. அச்சுப்படியைச் சரிபார்ப்பதற்கான நெறிமுறைகளைக் குறிப்பிடுக.
23. தலையங்கம் எழுதும்போது பின்பற்ற வேண்டியவை யாவை?
24. நிகழ்ச்சிகளை எவ்வாறு செய்திகளாக மாற்ற வேண்டும்?
25. செய்தித் தலைப்பினால் விளையும் பயன்களைக் குறிப்பிடுக.
26. வானொலியில் உரையாற்றுவோர் எத்தகைய பயிற்சிகளைப் பெற்றிருக்க வேண்டும்?
27. வானொலி நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கும் முறைகளைக் குறிப்பிடுக.
28. தொலைக்காட்சியில் நேர்காணல் நிகழ்ச்சியை எங்ஙனம் சிறப்பாக உருவாக்கலாம்?

29. வானொலியில் இலக்கிய நிகழ்ச்சிகளை எவ்வாறெல்லாம் அமைக்கலாம்?

30. நேர்காணலுக்கும் கலந்துரையாடலுக்கும் உள்ள வேறுபாடுகளைப் புலப்படுத்துக.

## பகுதி - ஈ

## ❖ கட்டுரை வடிவில் விடையளி

31. ஊடகத்துறையில் மொழியின் பயன்பாடு குறித்துக் கட்டுரை வரைக.

32. அண்மையில் நடைபெற்ற ஏதாவது ஒரு நிகழ்வினை அடிப்படையாகக் கொண்டு தலையங்கம் எழுத முயல்க.

33. புகழ்பெற்ற தலையங்கம் ஒன்றினை எடுத்துக்காட்டி அதன் சிறப்பம்சங்களை ஆராய்க.

34. வானொலி மற்றும் தொலைக்காட்சியில் செய்தி வாசித்தலின் போது பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளைப் புலப்படுத்துக.

35. புகழ்பெற்ற இலக்கியச் சிந்தனையாளர் அல்லது எழுத்தாளர் யாரேனும் ஒருவரிடம் நேர்காணலுக்குச் செல்வதாகக் கற்பனை செய்து கொண்டு அதற்கான வினாநிரலை வடிவமைக்க.

36. நுமது ஊரில் நடைபெற்ற கோயில் திருவிழா அல்லது பொங்கல் விளையாட்டு விழாவினை நேர்முக வர்ணனை செய்க.

37. வானொலி மற்றும் தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவோர் கடைபிடிக்க வேண்டியவை பற்றி விவரி.

38. தற்காலத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கலந்துரையாடல் எவ்வாறு அமைகிறது? அவற்றின் நிறைகுறைகளை ஆய்க.

39. நும் பாடப்பகுதி ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு இலக்கிய நிகழ்ச்சி ஒன்றினை வடிவமைக்க.

40. வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் போது கவனிக்க வேண்டியவை மற்றும் எதிர்கொள்ள வேண்டிய சவால்களை விவரி.